வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந,க.எண். 3516/ஆ4/2024 நாள் : 28.12.2024

பொருள் : தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – 2024–2025ம் கல்வியாண்டில் பள்ளிகளில் பயிலும் பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான முதல் திருப்புதல் தேர்வுகள் தொடர்பாக தேர்வுக்கால அட்டவணை – தலைமையசிரியர்களுக்கு – தெரிவித்தல் – சார்பு.

-----

மேற்காணும் பொருள் சார்பாக 2024–2025 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் மேல்நிலை இரண்டாமாண்டு பயிலும் பள்ளி மாணவர்களுக்கு ஜனவரி 06.01.2025 அன்று முதல் திருப்புதல் தேர்வுகள் நடத்தப்படவுள்ளன. அதற்கான தேர்வுக்கால அட்டவணைகள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

மேற்காண் விவரத்தினை அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் தங்கள் பள்ளி ஆசிரியர்கள் வாயிலாகவும்,தேர்வுக் கால அட்டவணையினை அறிவிப்புப் பலகையில் ஒட்டியும் அனைத்து மாணவர்கள் / பெற்றோர்கள் அறியும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் டிசம்பர் –2024 அரையாண்டுத் தேர்வுகள் முடிவுற்று விடைத்தாட்கள் திருத்திய உடன் தேர்ச்சி சதவிகிதம் சார்பான விவரங்கள் இத்துடன் இணைப்பில் காணும் **Google sheet –**ல் 02.01.2025 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் பதிவுகள் மேற்கொள்ள அனைத்து அரசு /நகரவை / ஆதிதிராவிடர் நல / அரசு நிதியுதவி உயர் / மேல்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

இணைப்பு:–

1. முதல் திருப்புதல் தேர்வு கால அட்டவணை.
2. அரையாண்டு தேர்ச்சி சார்பான Google sheet link

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

- அனைத்துவகை உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்.

நகல்:–

- மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை /தனியார்), வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவுடம தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
- மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கக்கல்வி )அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
- வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.